அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

ஜூன் - 2025 | மரம் - 4 | கன்று - 6 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-



என் மகனே, நீ கர்த்தருடைய
சிட்சையை அற்பமாக எண்ணாதே,
**அவர் கடிந்துகொள்ளும்போது**
**சோர்ந்துபோகாதே.**

நீதிமொழிகள் 3:11

ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

கிறிஸ்துவுக்குள் எனதன்பு **ஒலிவமரக் கன்றுகள்** இதழின் முதன்மை வாசகர்களான குட்டீஸ்களே! இவ்விதழின் கதைகளைப் படித்து இளையோருக்கு சுவைபட எடுத்துச் சொல்லும் பாட்டி தாத்தாமார்களே! உங்கள் அனைவரையும் இந்த சிறார் இதழின் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பரிசுத்த வேதாகமத்தில் குழந்தைகளும், சிறுவர்களும் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் (ஆதி 1:28) என தேவன் மனிதனுக்கு முதல் கட்டளையைக் கொடுத்து குழந்தைகளின் பரலோக வருகையை ஆசீர்வதிக்கிறார். அதனால் தான், தேவனின் கொடையாக அவர்கள் இருக்கிறார்கள்.

தேவனின் வரங்களைப் பாழாக்காமல் இருக்க வேண்டியது நம்மிடம் தரப்பட்டிருக்கும் முதல் கடமை. குழந்தைகளை நல்வழியில் வளர்க்க வேண்டிய கடமையும் பெற்றோருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அது ஆன்மீகம் தொடங்கி, வாழ்க்கைப் பாடம் வரை நீள்கிறது.

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதிமொழிகள் 22:6) எனும் வேத வசனம் அதை நமக்கு இன்னும் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது! அப்படியே பிள்ளைகள் பக்கத்திலும் திரும்பி ''என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே'' (நீதி. 1:8) என்கிறது நீதிமொழிகள்.

சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் என்றார் இயேசு (மாற்கு 10:14). சிறு பிள்ளைகள் இயேசுவின் மிகப்பெரிய பிரியத்துக்குரியவர்களாக இருக்கின்றனர். இயேசு கோபமடையும் சந்தர்ப்பங்கள் மிகவும் அபூர்வம். தந்தையின் வீடு சந்தை போல மாறி, அதன் அர்த்தத்தை இழந்தபோது கோபமடைந்தார். இப்போது குழந்தைகளைத் தடுப்பதைக் கண்டு கோபமடைகிறார். காரணம் பரலோக ராஜ்ஜியம் சிறுபிள்ளைகளைப் போல மாறுவோருக்கானது என்கிறார் இயேசு.

சிறுவர்கள் நமது வாழ்வின் மிக முக்கியமானவர்கள். அவர்களை சிறந்த ஆன்மீக வெளிச்சத்தில் வளர்க்க வேண்டியது நமது கடமையாகும். நமது சமூகத்தில் இருக்கின்ற சிறுவர்களை நேசிப்போம், வழிகாட்டுவோம், ஏற்றுக் கொள்வோம். அவர்களை எந்த விதத்திலும் தவறான வழிக்கு அழைத்துச் செல்லாதிருப்போம். அவர்கள் தூய்மையானவர்கள். அத்தகைய தூய உள்ளத்தோர் பரலோக வாழ்வின் சொந்தக்காரர்கள் என்பதை இயேசு தனது மலைப்பிரசங்கத்தில் உறுதிப்படுத்துகிறார்.

அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**



# தேவதாரு மரம்

**தேவதாரு மரம்,** தியோடர் மரம், இமயமலை சிடார் என்றும் அழைக்கப்படுகிறது, இது கிழக்கு ஆப்கானிஸ்தான், வடக்கு பாகிஸ்தான், இந்தியா மற்றும் நேபாளத்தில் மேற்கு இமயமலையை பூர்வீகமாகக் கொண்ட ஒரு ஊசியிலையுள்ள பசுமையான மரமாகும். இது பல நன்மைகளை வழங்குகிறது. இது Pinaceae குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் தாவரவியல் பெயர்: Cedrus deodara. தேவதாரு மரங்கள் 60 மீட்டர் உயரம் வரை வளரும் மற்றும் தொங்கும் கிளைகளுடன் கூம்பு வடிவ கிரீடம் கொண்டிருக்கும். இலைகள் ஊசி போன்றது மற்றும் 7 செமீ நீளம் வரை வளரும். மரம் 12 செமீ நீளம் கொண்ட கூம்புகளை உருவாக்குகிறது மற்றும் மர அமைப்புடன் உள்ளது.







தேவதாரு மரம் கட்டிட கட்டுமானம், தளவாடங்கள் மற்றும் அலங்கார வேலைப் பாடுகளுக்கு பயன்படுத்தப் படுகிறது. மரத்தின் அத்தியாவசிய எண்ணெய் அரோமாதெரபி மற்றும் பாரம்பரிய மருத்துவத்திலும் பல நூற்றாண்டுகளாக பயன்படுத்தப்படுகிறது.

## மருத்துவ குணங்கள்:

தேவதாரு மரத்தின் நன்மைகள் பல நூற்றாண்டுகளாக பாரம்பரிய மருத்துவத்தில் அவற்றின் பாக்டீரியா எதிர்ப்பு, பூஞ்சை காளான் மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மரத்தின் மரம் மற்றும் இலைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் இருமல், சளி, தோல் நோய்த்தொற்றுகள் மற்றும் மூட்டுவலி உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது.

**காற்று சுத்திகரிப்பு:** பல மரங்களைப் போலவே, கார்பன்-டை ஆக்சைடை உறிஞ்சி வளிமண்டலத்தில் ஆக்ஸிஜனை வெளியிடுகிறது. இருப்பினும், அவை தீங்கு விளைவிக்கும் மாசுபடுத்திகளை உறிஞ்சும் திறனைக் கொண்டுள்ளன, அவை பயனுள்ள காற்று சுத்திகரிப்பாளர்களாக ஆக்குகின்றன.

**மண் பாதுகாப்பு:** தேவதாரு மரத்தின் வேர்கள் ஆழமாகவும் வலுவாகவும் இருப்பதால், அவை மண் அரிப்பைத் தடுப்பதில் பயனுள்ளதாக இருக்கும். அவை மண்ணில் ஊட்டச்சத்துக்கள் மற்றும் கரிமப் பொருட்களைச் சேர்ப்பதன் மூலம் மண்ணின் தரத்தை மேம்படுத்த உதவுகின்றன.

**அழகியல் மதிப்பு:** தேவதாரு மரங்கள் அவற்றின் அழகுக்காக பரவலாகப் போற்றப்படுகின்றன, மேலும் அவை பெரும்பாலும் இயற்கையை ரசித்தல் மற்றும் அலங்கார தோட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றின் மென்மையான, ஊசி போன்ற இலைகள் மற்றும் மணம் மிக்க மரம் ஆகியவை அமைதியான மற்றும் இயற்கையான சூழலை உருவாக்குவதற்கான பிரபலமான தேர்வாக அமைகின்றன.

**மர உற்பத்தி:** தேவதாரு கூம்புகள் வலுவான மற்றும் நீடித்தது. இது கட்டுமானம், தளவாடங்கள் மற்றும் அலங்கார வேலைப்பாடுகளுக்கு ஏற்றதாக அமைகிறது.

**சுவாசக் கோளாறுகள்:** தேவதாரு மரம் அதன் எதிர்பார்ப்பு பண்புகளுக்கு பெயர் பெற்றது, இது இருமல், சளி, மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் ஆஸ்துமா போன்ற சுவாச நோய்களுக்கு சிகிச்சையளிப்பதில் திறம்பட செய்கிறது.

**மூட்டு வலி:** தேவதாரு மரத்தில் இருந்து எடுக்கப்படும் அத்தியாவசிய எண்ணெயில் அழற்சி எதிர்ப்பு பண்புகள் உள்ளன, இது மூட்டுவலிக்கு சிகிச்சையளிப்பதில் பயனுள்ளதாக இருக்கும்.

**தோல் நோய்த்தொற்றுகள்:** தேவதாரு மரத்தின் நன்மைகள் பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் பூஞ்சை எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளன, இது ரிங்வோர்ம், அரிக்கும் தோலழற்சி மற்றும் தடிப்புத் தோல் அழற்சி உள்ளிட்ட பல்வேறு தோல் நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்சையளிப்பதில் பயனுள்ளதாக இருக்கும்.

**செரிமான பிரச்சனைகள்:** தேவதாரு மரம் செரிமானத்தை மேம்படுத்துவதாக அறியப்படுகிறது மற்றும் அஜீரணம், மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப்போக்கு சிகிச்சையில் பயனுள்ளதாக இருக்கும்.

**காய்ச்சல்:** தேவதாரு மரத்தின் மருத்துவப் பயன்கள் ஆண்டிபிரைடிக் பண்புகளைக் கொண்டுள்ளன, இது காய்ச்சலைக் குறைப்பதில் திறம்பட செய்கிறது.

**தலைவலி:** தேவதாரு மரத்தின் அத்தியாவசிய எண்ணெய் மனதையும் உடலையும் அமைதிப்படுத்தும் விளைவைக் கொண்டிருக்கிறது, இது தலைவலி மற்றும் ஒற்றைத் தலைவலிக்கு சிகிச்சையளிப்பதில் பயனுள்ளதாக இருக்கும்.

**காயம் குணமாகும்:** தேவதாரு மரத்தில் கிருமி நாசினிகள் உள்ளன, இது காயங்களுக்கு சிகிச்சையளிப்பதிலும், நோய்த்தொற்றுகளைத் தடுப்பதிலும் பயனுள்ளதாக இருக்கும்.

## தேவதாருவின் பக்க விளைவுகள்:

தேவதாரு கூம்புகள், எண்ணெய் அல்லது பிற பொருட்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு ஒரு சுகாதார நிபுணருடன் கலந்தாலோசிப்பது முக்கியம்.

சிலருக்கு தேவதாரு மரம் அல்லது எண்ணெய்க்கு ஒவ்வாமை அல்லது உணர்திறன் இருக்கலாம், இது தோல் எரிச்சல் அல்லது சொறி ஏற்படலாம். தேவதாரு மரத்திலிருந்து மரத்தூள் அல்லது எண்ணெயை உள்ளிழுப்பது சுவாச எரிச்சலை ஏற்படுத்தும், குறிப்பாக ஆஸ்துமா அல்லது பிற சுவாச நிலைமைகள் உள்ளவர்களுக்கு. கண் எரிச்சல் ஏற்படலாம்.

தேவதாருவின் இந்த பக்க விளைவுகள் ஒப்பீட்டளவில் அரிதானவை. மேலும் பெரும்பாலான மக்கள் எந்தவிதமான பாதகமான விளைவுகளையும் சந்திக்காமல் தேவதாரு மரம் அல்லது எண்ணெயைப் பயன்படுத்த முடியும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தேவதாரு தயாரிப்புகளைப் பயன்படுத்துவதில் உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால், மேலும் தகவலுக்கு நீங்கள் ஒரு சுகாதார நிபுணர் அல்லது தகுதி வாய்ந்த மூலிகை மருத்துவரிடம் ஆலோசனைப் பெறலாம்.

முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்... அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும் (ஏசாயா 55:13).

எனில் நன்மையான எந்த ஈவையும், செழுமையையும் தர விரும்புகிறவர்தான் கர்த்தர் என்பதே அதன் பொருள்.

# வேதமே வெளிச்சம்


உபாகமம் 22:7
God bless you
நீ நன்றாயிருப்பாய்;
உன் நாட்களும்
நீடித்திருக்கும்.


சங்கீதம் 71:1
God bless you
கர்த்தாவே,
உம்மை நம்பியிருக்கிறேன்;
நான் ஒருபோதும்
வெட்கமடையாதபடி செய்யும்.


நீ மிகவும் பிரியமானவன்.
ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத்
தொடங்கினபோதே
கட்டளை வெளிப்பட்டது.
தானியேல் 9:23
God bless you


உங்கள் துக்கம்
சந்தோஷமாக மாறும்.
God bless you
யோவான் 16:20

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

நோவா! உலகின் முதல் மனிதனான ஆதாமின் பத்தாவது தலைமுறையில் வாழ்ந்த மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மனிதர். தேவனின் அருளையும், அன்பையும் பெற்றவர். உலக வரலாற்றில் மிக மிக முக்கியமானவர். நோவாவின் காலத்தில் பூமியிலுள்ள மக்கள் வன்முறைகளிலும், தீய வழிகளிலும் நாட்டம் உடையவர்களாக இருந்து வந்தார்கள். அவர்கள் தேவனின் கட்டளைகளைக் கடைபிடிக்காமல், அவருடைய விருப்பத்துக்கு மாறாக வாழ்ந்து வந்தார்கள். மக்கள் தன்னைவிட்டு விலகி தங்கள் மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருப்பதைக் கண்ட தேவன் வருத்தமும் கோபமும் அடைந்தார். தான் படைத்த மனிதன் தன்னை மதிக்காமல் இருக்கிறானே என்னும் கோபம் அவருக்குள் கொழுந்து விட்டெரிந்தது. பாவம் செய்யும் மனிதர்களுக்குத் தரவேண்டிய தண்டனை மரணம் ஒன்றே என்று தேவன் தீர்மானித்தார். அதன்படி உலகை முழுவதுமாக அழிக்கவேண்டும் என்னும் ஒரு மிகப்பெரிய முடிவை எடுத்தார்.



அவருடைய கண்களுக்கு ஒரே ஒரு நீதிமான் மட்டும் தென்பட்டார். அவர் நோவா. நோவா குற்றமற்ற மனதோடும், இறை பக்தியோடும் வாழ்ந்து வந்தார். உலகை அழித்தாலும் நோவாவை அழிக்கக்கூடாது என்று தேவன் தீர்மானித்தார். நோவாவின் மூலமாக உலகில் குற்றமற்ற ஒரு சந்ததியினரை உருவாக்க வேண்டும் என்று எண்ணி அவர் நோவாவிடம் பேசினார்.

‘நோவா... நான் தான் உன் தேவன் பேசுகிறேன்.’

‘ஆண்டவரே பேசும்..’ தேவனின் குரலைக் கேட்ட நோவா தரையில் மண்டியிட்டார்.

‘நான் உன்னிடம் ஒரு மிகப்பெரிய பணியை ஒப்படைக்கப் போகிறேன்.’

‘பேசும் ஆண்டவரே... கேட்கிறேன்’ நோவா பணிவாய்ச் சொன்னார்.

‘உலகில் எல்லா மனிதர்களும் என்னை விட்டு விலகிப் போய்விட்டார்கள். அவர்களின் மனதுக்குள் இப்போது வன்முறை எண்ணங்களும், சிற்றின்ப ஆசைகளும் தான் நிறைந்து வழிகின்றன. இப்படி ஒரு மனித இனத்தைப் படைத்ததற்காக நான் வேதனைப்படுகிறேன். எனவே எல்லோரையும் அழிக்கப்போகிறேன்’ தேவன் சொன்னார்.

‘தேவனே.. எல்லா மனிதர்களையுமா?’ நோவா அதிர்ச்சியுடன் கேட்டார்.

‘ஆம்... உன்னைத் தவிர எல்லா மனிதர்களையும்’ தேவன் சொன்னார். தேவனின் திட்டத்தைக் கேட்ட நோவா நடுங்கினார்.

‘உன்னையும் உன் குடும்பத்தினரையும் நான் அழிக்கமாட்டேன். உங்கள் மூலமாக இனிமேல் உலகில் ஒரு பாவமற்ற மனித இனத்தை உருவாக்கப் போகிறேன்’ தேவன் சொன்னார். நோவா அமைதியுடன் கேட்டுக்கொண்டிருக்க, தேவன் தொடர்ந்தார்.

‘நான் உலகை தண்ணீரால் மூழ்க வைத்து அழிக்கப் போகிறேன். தண்ணீருக்குள் மூழ்கி மனித இனமும், மற்ற எல்லா உயிரினங்களும் அழிந்து போகட்டும்’ தேவன் கோபமாய்ச் சொன்னார்.



‘தேவன்... தண்ணீரால் உலகை அழிக்கப்போகிறீர் என்றால் நாங்கள் எப்படித் தப்புவது? தப்பிப் பிழைத்தபின் உலகில் மற்ற உயிரினங்களே இல்லையென்றால் எப்படி உயிர்வாழ்வது?’ நோவா கேட்டார்.

‘நான் சொல்கிறேன். நீ ஒரு மிகப்பெரிய பேழையைச் செய்யவேண்டும். பேழை செய்ய கொப்பேர் மரத்தைப் பயன்படுத்து, அதுதான் நீண்ட நாள் தண்ணீரில் கிடந்தாலும் வீணாகாது. பேழையில் மூன்று அடுக்குகள் இருக்குமாறு பார்த்துக்கொள். பேழையினுள் தண்ணீர் புகாமலிருக்க உள்ளே கீல் பூசு.’ தேவன் பேசுவதையெல்லாம் நோவா அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

‘நீ உன்னுடைய குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு பேழைக்குள் செல்ல வேண்டும். ஜோடி ஜோடியாக பல இன விலங்குகளையும், பறவைகளையும் பேழைக்குள் எடுத்துப் போ. நீயும், உன் குடும்பத்தினர் மற்றும் விலங்குகள், பறவைகள் எல்லோருக்கும் தேவையான அளவு உணவை மறக்காமல் எடுத்துச் செல்’ தேவன் சொன்னார்.

‘தேவனே எப்போது நான் பேழை செய்ய ஆரம்பிக்க வேண்டும்?’ நோவா கேட்டார்.

‘இப்போதே...’ சொல்லிவிட்டு தேவன் அகன்றார்.

நோவா உடனே பேழை ஒன்றை செய்யத் துவங்கினார். அவர் கொப்பேர் மரங்களை வெட்டிச் சேகரித்து அவற்றை சரியான அளவில் வெட்டி பேழைக்கான வேலைகளில் மூழ்கினார். நாட்கள் நகர்ந்துகொண்டே இருந்தன. அப்போது நோவாவின் வயது ஐநூறு கடந்திருந்தது. இரவு பகலாக உழைத்து நோவா தேவன் சொன்ன அளவில் பேழையைச் செய்து முடித்தார். தேவன் சொன்னபடியே விலங்குகளையும் பறவைகளையும் உணவுகளையும் கொண்டு தன்னுடைய குடும்பத்தினரோடு பேழைக்குள் சென்றார். நோவாவின் குடும்பத்தினர் யாரும் அவருடைய பேச்சை மறுக்கவில்லை. எல்லோரும் பேழையின் உள்ளே புகுந்ததும் கடவுள் நோவாவின் பேழையைப் பாதுகாப்பாய்ப் பூட்டினார்.

வருடங்கள் கடந்தன, சுமார் நூறு ஆண்டுகள் எந்த அறிகுறியும் இல்லை. அதன்பின் ஒருநாள். வானம் தன் மதகுகளைத் திறந்து பெருமழையைக் கொட்டியது. மழை... மழை... பெரும் மழை. நிற்காமல் பெய்துகொண்டே இருந்தது கனத்த மழை. இதற்கிடையில் பூமியிலும் ஊற்றுகள் பீறிட்டுக் கிளம்பின. பூமி கொஞ்சம் கொஞ்சமாய் நீரில் மூழ்கத் துவங்கியது. பூமியிலிருந்த மக்கள் எல்லாம் செய்வதறியாமல் திகைத்தார்கள். தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக தானியங்களையும், விலங்குகளையும் மனிதர்களையும் மூழ்கடித்தது. மரங்களும், மலைகளும் கூட மூழ்கிப் போயின. பறவைகள் அடைவதற்கு இடமில்லாமல் தண்ணீரில் தத்தளித்து மாண்டுபோயின. நோவாவின் பேழை மட்டும் தண்ணீரின் மேல் மிதக்கத் துவங்கியது.

தண்ணீர் தன் பிரம்மாண்டக் கரங்களால் பூமியை அழுத்திப் பிசைந்தது. தண்ணீரின் கால்களில் பூமியின் உயிரினங்களெல்லாம் மிதிபட்டு உயிர்விட்டன. செடிகள், மரங்கள், மலைகள் எல்லாம் தண்ணீரில் முழுவதுமாக மூழ்கிப் போக, பெரிய மலைகளுக்கும் பதினைந்து முழம் மேலே தண்ணீர் நின்றது. மழை நாட்கள், வாரங்கள், மாதங்கள் என நீண்டு, பூமி நூற்று ஐம்பது நாட்கள் தண்ணீருக்குள் மூழ்கிக் கிடந்தது. நாசியால் சுவாசித்து வாழ்ந்த அத்தனை உயிரினங்களும் தண்ணீரில் மூழ்கி இறந்தே போயின. மனிதர் எவரும் மிச்சமிருக்கவில்லை. அத்தனை உயிரினங்களும் மடிந்தபின் வானம் மழைபொழிவதை நிறுத்தியது. பூமியிலிருந்த ஊற்றுகளும் அடைபட்டன. பூமியில் காற்று வீசத் துவங்கியது.

பூமியிலிருந்த தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக வற்றத் துவங்கியது. நோவாவின் பேழை அராரத்து மலையின் மேல் வந்து இறங்கியது.

மீண்டும் நாற்பது நாட்கள் யாரும் பேழையைத் திறக்கவில்லை. பேழைக்குள் இருந்த நோவா, தண்ணீர் வற்றிவிட்டதா என்பதை அறிய விரும்பினார். அதற்காக தன்னுடைய பேழையில் இருந்த சாளரத்தைத் திறந்து காகம் ஒன்றை வெளியே அனுப்பினார். காகம் வெளியே போய்விட்டு வந்து பேழையின் மேல் அமர்ந்தது. மீண்டும் பறந்து சென்றுவிட்டு வந்தது, இவ்வாறு பலமுறை நிகழ்ந்ததைக் கண்ட நோவா, பூமியில் தண்ணீர் வற்றிவிடவில்லை, காகம் அமர மரங்கள் ஒன்றும் வெளித்தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

சிறிது நாட்களுக்குப் பின், புறா ஒன்றை வெளியே அனுப்பினார். அதுவும் வெளியே பறந்து திரிந்து தான் அமர கிளைகள் ஏதும் தென்படாததால் மீண்டும் பேழைக்கே வந்து சேர்ந்தது. ஏழு நாட்களுக்குப் பின் மீண்டும் புறாவை வெளியே அனுப்பினார் நோவா. அது வெளியே போய்விட்டு பேழைக்குத் திரும்பி வந்தபோது அதன் அலகில் ஓர் ஒலிவ இலை இருந்தது. அதன் மூலம் பூமியில் தண்ணீர் வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பதை நோவா புரிந்து கொண்டார். மீண்டும் ஏழு நாட்கள் கடந்தபின் நோவா புறாவை மீண்டும் வெளியே அனுப்பினார். அந்த புறா அதன்பின் பேழைக்குத் திரும்பவே இல்லை! தண்ணீர் முழுமையாய் வற்றி விட்டது என்பது நோவாவிற்கு விளங்கியது.

தேவன் நோவாவின் பேழையைத் திறந்தார். பூமியில் தண்ணீர் வற்றிப் போயிருந்தது. பூமி வெறுமையாய்க் கிடந்தது. பறவைகளின் ஒலியோ, விலங்குகளின் சத்தமோ எதுவும் பூமியில் இல்லை. மனிதர்கள் யாருமே உயிரோடு இல்லை. தேவன் நோவாவிடம், ‘போதும் வெளியே வாருங்கள். வெளியே பூமி தன்னுடைய பாவங்களைக் கழுவி தூய்மையாய் இருக்கிறது. இனிமேல் நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள். பாவம் இல்லாத ஒரு உலகத்தைப் படையுங்கள்’ என்றார். நோவாவின் குடும்பத்தினரும், பேழைக்குள் இருந்த அனைத்து உயிரினங்களும் மீண்டும் பூமிக்குத் திரும்பின. அப்போது பூமியில் அவர்களைத் தவிர யாருமே இல்லை. ஒரு ஆண்டும் பத்து நாட்களும் நோவாவும் குடும்பமும் பேழைக்குள் அடைபட்டுக் கிடந்தன. உலகம் முழுவதும் அழிந்தாலும் தன்னையும், குடும்பத்தையும் காப்பாற்றிய தேவனுக்கு நோவா நல்ல விலங்குகள், பறவைகளை எரிபலி செலுத்தினார்.

தேவன் நோவாவின் பலியில் மகிழ்ந்து, ‘இனிமேல் நான் பூமியைத் தண்ணீரால் அழிக்கமாட்டேன். நீயும் உன் சந்ததியினரும் பூமியை ஆளுங்கள். விரும்பும் உயிரினங்களை உண்ணுங்கள், ஆனால் இரத்தத்தோடு உண்ணாதீர்கள். ஒரு மனிதனின் இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனிதராலேயே சிந்தப்படும். உங்களோடு மீண்டும் என் உடன்படிக்கையை நிலை நாட்டுகிறேன். இனி பூமி தண்ணீரால் அழிக்கப்பட மாட்டாது. இந்த உடன்படிக்கையின் அடையாளமாக வில் ஒன்றை வானத்தின் மீது வைக்கிறேன். மழைநாட்களில் அது நம் உடன்படிக்கையை நினைவுபடுத்தும். நான் இனி பூமியை வெள்ளப்பெருக்கினால் அழிக்கவே மாட்டேன்’ என்றார்.

நோவா தேவனுக்குப் பணிந்து அவருடைய வழிகளில் வாழ்ந்து வந்தார். அவர் மரணமடைந்தபோது அவருடைய வயது தொள்ளாயிரத்து ஐம்பது.

தொடரும்...

# "நோவாவும், பேழையும்" தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக. (வாசிக்க: ஆதி. 6-9)

புறா
மழை
காகம்
பேழை
நோவா
இராட்சதர்
தேவகுமாரர்
ஒலிவ இலை
கொப்பேர் மரம்



வில்
சேம்
காம்
ஜலம்
அரராத்
பலிபீடம்
யாப்பேத்
ஜீவஜந்துக்கள்
உடன்படிக்கை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ | வி | ல் | த | ல் | நோ | து | அ | றா | ம |
| ம | ழை | கு | பே | உ | வா | சே | ர | ஒ | ஜீ |
| கா | பு | றா | ழை | ம் | பே | ம் | ரா | லி | வ |
| யா | தே | வ | கு | மா | ர | ர் | த் | வ | ஜ |
| ப் | உ | ட | ன் | ப | டி | க் | கை | இ | ந் |
| பே | ஜ | பீ | இரா | ட் | ச | த | ர் | லை | து |
| த் | ல | கொ | ப் | பே | ர் | ம | ர | ம் | க் |
| இ | ம் | க | யா | ர | கா | க | ம் | கா | க |
| ப | லி | பீ | ட | ம் | நோ | ல | த் | ம் | ள் |

# ஓநாய்!



இன்று அநேக கள்ள உபதேசங்கள் பெருகி இருக்கின்ற இந்த கடைசி நாட்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினருடைய உபதேசங்களை குறித்து கிறிஸ்தவர்களாகிய நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஏனென்றால் இவர்கள் தங்களை ஆவிக்குரியவர்களாக காண்பித்து அநேக கிறிஸ்தவர்களை வஞ்சிக்கிறவர் களாயிருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவினிடத்தில் சீஷர்கள் கடைசி நாட்களை குறித்து கேட்கும் பொழுது ஆண்டவர் அவர்களுக்கு முதலாவது சொன்னது ''ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' (மத்தேயு 24:4) என்றார். ஏனென்றால் ''அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்'' (மத்தேயு 7:15) என்றார். இப்படிப்பட்ட ஓநாய்களையும் அவர்களுடைய கள்ள உபதேசங்களையும் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப்போஸ்தலனாயிருக்கிற பவுலும் ''நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்'' (அப்போ 20:29) என்றார்.

குருடனுக்குக் குருடன் வழிகாட்டக்கூடுமோ? (லூக் 6:39) இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா? என்று இயேசு கிறிஸ்து ஒரு உவமையை சொன்னார். அதே போல இவர்களும் சத்துருவின் உதவியோடு அநேகரை கேட்டின் பாதையிலே வழிநடத்தி சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பொதுவாக மற்ற மதத்தினர் மத்தியில் இவர்களுடைய உபதேசத்தை சொல்வதில்லை. இவர்களுடைய நோக்கமெல்லாம் கிறிஸ்தவர்களை குழப்பிவிட்டு இவர்களுடைய கள்ள உபதேசத்தை சபைக்குள்ளே நுழைக்கவேண்டும் என்பதே. இந்த கடைசி நாட்களில் சபை விழிப்பாக இருக்கவேண்டியது அவசியமாய் இருக்கிறது.



மூர்க்கம், பேராசை, கொடூரம், தந்திரம் போன்ற கெட்ட குணங்களுக்குத்தான் ஓநாய்கள் வேதத்தில் அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. போலித் தீர்க்கதரிசிகள், கிறிஸ்தவ ஊழியத்தைக் கொடூரமாக எதிர்க்கிறவர்கள், கிறிஸ்தவ சபைக்குள்ளிருந்தே எழும்பும் ஆபத்தான பொய்ப் போதகர்கள் போன்ற ஆட்கள் ஓநாய்களுக்கு ஒப்பிடப் படுகிறார்கள். இந்த மாதம் ஓநாயைக் குறித்து பார்க்கலாம்.



**ஓநாய்** (Wolf) என்பது நாய்க் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு காட்டு விலங்கு ஆகும். இது வீட்டில் வளர்க்கப்படும் நாயை விட கொஞ்சம் பெரியதாக இருக்கும். பார்ப்பதற்கு நாய்களைப் போன்றே இருக்கும். காட்டு விலங்காகிய ஓநாய்களைப் பழங்காலத்து மாந்தர்கள் பழக்கி வேறு இனங்களாகத் திரித்து உருவாக்கியவைதான் வீட்டு நாய்கள் என உயிரியல் அறிஞர்கள் கருதுகின்றனர். ஓநாய்கள் வட அமெரிக்காவிலும், ஆசியா முழுவதிலும் உள்ள காடுகளிலும் காணப்படுகின்றன. தென் அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் ஓநாய்கள் இல்லை.

ஓநாய்களில் இரண்டே வகைகள்தான் இன்றுள்ளன. முதல் வகையானது சாம்பல்நிற ஓநாய் (Gray wolf), இரண்டாவது வகை செந்நாய் (Red wolf). இந்த இரண்டாம் வகை பெரும்பாலும் காட்டுப் பகுதிகளில் முற்றுமாய் அற்றுப்போய் விட்டதாக எண்ணப்படுகின்றது.

ஓநாய்கள் மிகவும் பாசமான விலங்கு. ஓநாய்கள் பெரும்பாலும் கூட்டமாகவே வாழும், கூட்டமாகவே வேட்டையாடும். ஓநாய்கள் பொதுவாக குகைகளிலே அதிகமாக வாழும்.

உருவத்தில் சிறியதாக இருந்தாலும் பார்க்கும்போதே பயத்தை உண்டு பண்ணக்கூடிய வகையில் இருப்பதற்கு அதன் கண்களும் ஒரு மிகப்பெரிய காரணம். இரவு நேரத்தில் ஓநாய்களால் நன்கு பார்க்க முடியும். கிட்டத்தட்ட 250 டிகிரி வரை அதன் கண்களை சுழற்றி ஓநாய்களால் பார்க்க முடியும்.

நன்கு வளர்ந்த ஓநாய்கள் கிட்டத்தட்ட 35 முதல் 55 கிலோ வரை எடை இருக்கும். பெண் ஓநாய் ஆண் ஓநாயை விட பார்ப்பதற்கு பெரிதாக இருக்கும்.

ஓநாய்கள் பலவகையான மான்களையும், எல்க்கு, விரிகலை மூசுமான் எனப்படும் பெரிய விலங்குகளையும் கூட்டமாகச் சென்று தாக்கிக் கொன்று உண்ண வல்லவை. ஓநாய்கள் அதிகமாக இறைச்சி உணவுகளையே உட்கொள்ளும். ஓநாய்கள் ஒருமுறை சாப்பிடும் போது 3ல் இருந்து 5 கிலோ வரையிலான உணவை உட்கொள்கின்றன. நன்கு வளர்ந்த ஓநாய் ஒரு முறை சாப்பிடும் போது 9 கிலோ இறைச்சியை கூட உட்கொள்ளும் தன்மை உடையது. உணவுக்காக ஒரே நாளில் மட்டும் கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் தூரம் வரை பயணம் செய்யக்கூடியவை.

ஓநாய்கள் சாப்பிடும் இரையானது விரைவில் செரிமானம் ஆகும் தன்மை உடையது. அதனால் ஒரே நாளில் கூட நான்கு, ஐந்து முறை சாப்பிட்டுக் கொண்டே இருக்கும். பனிப் பிரதேசங்களில் வாழும் சில வகை ஓநாய்கள் அங்கு நிலவும் சூழலுக்கு ஏற்ப உணவை கொழுப்புகளாக மாற்றி சேமித்து வைத்துக் கொள்கின்றன. பனிப்பிரதேசங்களில் பொதுவாக 6 மாதங்களுக்கு கடும் பனிப்பொழிவு மற்றும் குளிர் நிலவுவதால், குளிர்

இல்லாத ஆறு மாதங்களில் தங்களுடைய உணவுகளை உண்டு வயிற்றுப் பகுதியில் அவற்றை கொழுப்புகளாக மாற்றி வைத்துக் கொள்கின்றன. பின்னர் வரும் 6 மாதங்களில் இரைதேடாமல் ஓய்வெடுத்துக் கொண்டு சேமித்த கொழுப்பை உணவாக உட்கொண்டு உயிர் வாழும் தன்மை உடையவை ஓநாய்கள்.

ஓநாய்கள் மணிக்கு 45 கிலோமீட்டர் வேகத்தில் ஓடும் தன்மை உடையவை. தனது இரையை வாசனை மற்றும் கேட்கும் திறனை பயன்படுத்தி அறிந்து கொள்கிறது. ஓநாயின் காதுகள் கூரிய கேட்கும் தன்மையை உடையவை. ஓநாய்களின் கேட்கும் திறன் மனிதனை விட கிட்டத்தட்ட 20 மடங்கு அதிகமாக இருக்கும்.

ஓநாய்கள் எப்போதும் தனித்து இருக்கும் விலங்குகளை பெரும்பாலும் வேட்டையாடாது. கூட்டமாக இருக்கும் விலங்குகளையே அதிகமாக வேட்டையாடும். அப்படி வேட்டையாடும் போது அந்த கூட்டத்திற்கு அருகில் சென்று வயதான மற்றும் வயதில் சிறிய, பலவீனமான விலங்குகளை நன்கு கவனித்து, கூட்டத்தை கலைத்து, ஓடவிட்டு, சோர்வடையச் செய்து, இரையை வேட்டையாடும். அப்படி வேட்டையாடும் போது கிட்டத்தட்ட 7ல் 1 அல்லது 2 முறை தான் வேட்டையாடுதல் வெற்றிகரமாக அமையும். இரையை தேடும் போது ஏதேனும் ஒரு விலங்கு தனியாக நின்றால் அந்த விலங்கை பார்த்து சந்தேகம் அடைந்து வேட்டையாடாமல் விட்டு விடும்.

ஓநாய்கள் பொதுவாக முயல், காட்டுப்பன்றி, கோழி, ஆடு, மான், அணில், எலி போன்றவற்றை வேட்டையாடும். இவை தவிர ஓநாய்கள் சில நேரங்களில் பழங்களை கூட உண்ணும் இயல்புடையவை. பேரிக்காய், முலாம்பழம், அத்தி, ஆப்பிள் போன்ற பல வகைகளை உண்ணும். சில நேரங்களில் புற்களை கூட சாப்பிடும் தன்மை உடையவை. ஏனெனில் புற்களில் சிலவகை ஊட்டச்சத்துக்கள் இருப்பதால் மிகவும் அரிதாக அதையும் சாப்பிடும் தன்மை கொண்டவை.

ஓநாய்கள் ஊளையிடும் சத்தத்தை கேட்கும்போது மிகவும் பயமுறுத்தும் வகையில் இருக்கும். பிரிந்து போன தன்னுடைய இணையை ஒன்று சேர்ப்பதற்காகவும், பிரிந்து போன ஓநாய் கூட்டத்திற்கு இங்கும் ஒரு ஓநாய் கூட்டம் இருப்பதை தெரிவிப்பதற்காகவும் ஓநாய்கள் ஊளையிடுகின்றன. இந்த ஊளையிடுதல் என்பது ஓநாய்களின் ஒரு வகை தகவல் பரிமாற்றமாக பார்க்கப்படுகிறது. அடர்ந்த காடுகளில் ஓநாய்கள் ஊளையிடும் போது அதன் சத்தம் கிட்டத்தட்ட 9 கிலோமீட்டர் வரை கேட்கக்கூடும். அதுவே வெட்ட வெளியாக இருந்தால் 16 கிலோமீட்டர் தூரம் வரை கூட அதன் ஒலிகளை கேட்கும் அளவுக்கு அதிக சத்தம் உடையது.

ஒரு ஆண் ஓநாய் பெண் ஓநாயுடன் இணை சேர்ந்து விட்டால் கடைசி வரை அந்தப் பெண் ஓநாயுடனே வாழும். ஓநாய்களின் கர்ப்ப காலம் 63லிருந்து 65 நாட்கள் வரை இருக்கும். ஒரு பெண் ஓநாயானது ஒரே பிரசவத்தில் 4 முதல் 7 குட்டிகள் வரை போடும். ஆனால் இவை அனைத்தும் சூழலுக்கு தாக்குப்பிடித்து வளருமா என்று கேட்டால் அது சந்தேகம் தான்.

ஓநாய்களின் ஆயுட்காலம் கிட்டத்தட்ட 8 ல் இருந்து 10 ஆண்டுகள் ஆகும்.


மாறிவரும் சுற்றுப்புற சூழல்களால் ஓநாய்களும் தன்னுடைய இனத்தை தக்க வைத்துக் கொள்வதில் பலவிதமான சவால்களை எதிர்கொண்டு வருகின்றன!

**தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சகலத்தையும் உண்டாக்கினவருக்கு நன்றி.**


தன் இரையான செம்மறியாட்டிடம் செல்வதற்கு ஓநாய்க்கு சரியான வழிகாட்டுங்களேன்.




# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)




ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். எபிரெயர் 12:1




தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். மத்தேயு 23:12




சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்; பொறாமையோ எலும்புருக்கி. நீதிமொழிகள் 14:30




கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. அப்போஸ்தலர் 17:27



# குழந்தை தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினம்

✸ ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி குழந்தை தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினம் கடைபிடிக்கப்படுகிறது.

✸ குழந்தை தொழிலாளர்கள் இரண்டு வகையில் உருவாகிறார்கள். வறுமை, கல்வி அறிவின்மை காரணமாக பெற்றோர், பாதுகாவலர்கள் தம் குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது, அல்லது ஏஜென்ட்டுகளிடம் குறைந்த விலைக்கு விற்பது ஒரு வகை. இரண்டாவது வகை குழந்தை கடத்தல். உலகின் இருண்ட அறைக்குள் பணம் கொழிக்கும் வணிகமாக மாறிவிட்ட குழந்தை கடத்தலில் மில்லியன் கணக்கான குழந்தைகள் குழந்தை தொழிலாளராக விற்கப்படுகிறார்கள்.

✸ சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகளின்படி உலகெங்கிலும், 5 முதல் 17 வயது வரையிலான சுமார் 153 மில்லியன் குழந்தைகள் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர். இதில் 73 மில்லியன் பேர் அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். உலகின் ஏழ்மையான நாடுகளில், நான்கு குழந்தைகளில் ஒருவர் தங்கள் உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். குழந்தைத் தொழிலாளர்களில் கிட்டத்தட்ட பாதி (72 மில்லியன்) ஆப்பிரிக்காவில் காணப்படுகிறார்கள். அங்கு 5 குழந்தைகளில் ஒரு குழந்தை தொழிலாளராக வேலை செய்கிறது.

✸ குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமானது வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் கல்வி உரிமை என்பனவாகும். இவையனைத்தும் குழந்தைகளுக்கு தடையின்றி கிடைத்திட ஜெபிப்போம்.


# வேதாகம கதாநாயகர்கள்

**படங்களைப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்களை பொருத்துக:**









| | | | |
|---|---|---|---|
| **பேதுரு** (மத்தேயு) | **சகேயு** (லூக்கா 19) | **இயேசு** (சுவிசேஷங்கள்) | **தாவீது** (1 சாமுவேல்) |



# பள்ளி மாணவர்களுக்காக ஜெபிப்போம்

✸ தமிழகத்தில் புதிய கல்வியாண்டு (2025-2026) தொடங்கியுள்ளது. பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவருக்காகவும் ஜெபிப்போம்.

✸ மாணவர்கள் பள்ளிக்கு உற்சாகமாக செல்லவும், பயம் நீங்கி உற்சாகமாக கல்வி கற்கவும் ஜெபிப்போம்.

✸ புதிதாக பள்ளியில் சேரும் சிறு பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். நல்ல பள்ளிகளில் இடம் கிடைக்கவும், அவர்களின் பயம் நீங்கவும், நலமுடன் கல்வி கற்கவும் ஜெபிப்போம்.

✸ குடும்ப சூழ்நிலை காரணமாக பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திய மாணவர்கள் மீண்டும் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க ஜெபிப்போம்.

✸ எதிர்கால தலைமுறையை வடிவமைக்கும் கல்வி நிலையங்கள் லாப நோக்கற்று சேவை மனப்பான்மையுடன் செயல்பட ஜெபிப்போம்.

✸ மாணவர்களின் படிப்புக்குண்டான பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

✸ ஆசிரியர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் நல்ல உறவு உண்டாக ஜெபிப்போம்.

✸ மாணவர்களுக்கு தேவன் ஞானத்தையும், தயவையும், கிருபையையும் தரவும் ஜெபிப்போம்.

✸ மாணவர்களுக்கு ஞாபகத் திறன் அதிகமாகவும், புரிந்து படிக்கவும், படிப்பதை மறக்காமலிருக்கும் கிருபையைத் தர ஜெபிப்போம்.

✸ பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் ஒழுக்கமுடன் இருக்க, ஆசிரியருக்கு கீழ்ப்படிய ஜெபிப்போம்.

சீடத்துவ பாடம்

# கனி கொடுத்தால் சரி; இல்லையானால்...

ஒருவர் தம் திராட்சைத் தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைத்திருந்தார். அவர் வந்து அதில் கனியைத் தேடியபோது எதையும் காணவில்லை. எனவே அவர் தோட்டத் தொழிலாளரிடம், ''பாரும், மூன்று ஆண்டுகளாக இந்த அத்தி மரத்தில் கனியைத் தேடி வருகிறேன்; எதையும் காணவில்லை. ஆகவே இதை வெட்டிவிடும். இடத்தை ஏன் அடைத்துக்கொண்டிருக்க வேண்டும்?'' என்றார். தொழிலாளர் மறுமொழியாக, ''ஐயா, இந்த ஆண்டும் இதை விட்டுவையும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன். அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி; இல்லையானால் இதை வெட்டிவிடலாம்'' என்று அவரிடம் கூறினார்.


இயேசு இந்த உவமையைக் கூறியதற்கு ஒரு சின்ன பின்னணி உண்டு. அவர் வாழ்ந்த காலத்து யூத மக்களிடையே ஒரு நம்பிக்கை உண்டு. யாராவது நோய்வாய்ப்பட்டாலோ, யாருக்காவது அகால மரணம் நேரிட்டாலோ 'அவர்கள் பாவிகள்' அதனால் தான் இந்த நிலை என மற்றவர்கள் முடிவு கட்டி விடுகிறார்கள்.

தன்னை நீதிமான்களாக காட்டிக் கொள்பவர்கள் தான் உண்மையிலேயே பாவிகள். அவர்கள் மனம் திரும்ப வேண்டும். மனம் திரும்புதலின் கனியை அவர்கள் கொடுக்க வேண்டும் என்பதையே இயேசு இந்த உவமையின் மூலம் விளக்குகிறார்.

திராட்சைத் தோட்டத்தில் அத்தி மரம் என்பதே அத்தி மரத்துக்குக் கிடைக்கும் மிகப்பெரிய வரம். திராட்சைத் தோட்டத்தின் வளங்களையெல்லாம் உறிஞ்சி எடுத்து வளர முடியும். ஏகப்பட்ட இடத்தையும் அதிகரிக்கும். அப்படிப்பட்ட ஒரு அத்தி மரம் கனி கொடுக்காவிட்டால் தோட்ட உரிமையாளருக்கு அதனால் பயன் என்ன?

இங்கே அத்தி மரம் என்பது யூதர்கள் அல்லாதவர்களுக்குக் கிடைக்கும் மீட்பின் வாய்ப்பு எனலாம். நம்மைப் போன்ற பிற இனத்து மக்கள், கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட்டவர்கள் அந்த அத்தி மரம் போன்றவர்கள்.

தோட்ட உரிமையாளர் என்பவர் பிதாவாகிய தேவன். அவரே நம்மை நடுகிறவர். உயிர்களை அனுமதிப்பவர் அவரே. தோட்டக்காரர் குமாரனாகிய இயேசு கிறிஸ்து.



அத்தி மரத்தில் கனி இருக்கிறதா என்று தேடிக்கொண்டு பிதாவாகிய தேவனே வருகிறார். கனி கொடுக்கும் காலம் வந்த பின்புதான் அவர் வருகிறார். அதுவும் தொடர்ச்சியாக மூன்று பருவங்கள் அவர் வருகிறார். கனிகள் காணப்படவில்லை. எனவே அதை வெட்டி விட முடிவெடுக்கிறார்.

இங்கே தமது மக்களின் மீது தேவன் கொள்ளும் அன்பு வெளிப்படுகிறது. கனியைத் தேடி, தானே மனிதனைத் தேடி வரும் எதிர்பார்ப்பு நிறைந்த பிதாவாய் அவர் இருக்கிறார்.

குமாரனாம் இயேசுகிறிஸ்து நமக்கும் தேவனுக்குமிடையேயான மத்தியஸ்தராய் இருக்கிறார். பரமனாகவும், பரிந்து பேசுபவராகவும் அவரே இருக்கிறார். அவர் பிதாவிடம் நமக்காகப் பரிந்து பேசி 'இந்த ஆண்டும் இதை விட்டு வையுங்கள்' என்கிறார்.

இங்கே, இயேசுவின் அளவிட முடியாத அன்பு வெளிப்படுகிறது. இது வரை கனிதராத மரத்தையும் அன்பு செய்கிறார். அது இனியாகிலும் கனி தரும் என எதிர்பார்க்கிறார். அதற்காக, 'சுற்றிலும் கொத்தி எரு போடுவேன்' என களமிறங்குகிறார்.

இயேசு நாம் கனிகொடுக்க வேண்டுமென இடைவிடாமல் பணி செய்கிறார். நாம் வாழ்கின்ற நிலத்தைப் பண்படுத்துகிறார். நாம் வரங்கள் உறிஞ்சும் மரமாய் இருக்க உரத்தை நிரப்புகிறார். ஒரு மரம் கனி கொடுக்க என்னென்ன தேவையோ அனைத்தையும் தொடர்ந்து செய்கிறார்.

இப்போது கனி கொடுக்காமல் இருக்க நம்மிடம் சாக்குப் போக்கு எதுவும் இல்லை. நிலம் சரியில்லை, நீர் கிடைக்கவில்லை போன்ற சாக்குபோக்குகள் இனிமேல் சொல்ல முடியாது. அப்போதேனும் கனி கொடுக்கிறோமா?

கனி உடைய மரங்களைக் கண்டுபிடிப்பது எளிது. வாசனை காற்றில் மிதந்து வந்து நம்மை அழைக்கும். கனிகளின் வசீகரம் கண்ணில் தோன்றி நம்மை ஈர்க்கும். அல்லது பறவைகள் அந்த மரத்தின் தலையில் வட்டமிடும். கனி கொடுக்கும் வாழ்க்கை, மலை மேல் இருக்கும் ஊரைப் போன்றது. அது மறைவாய் இருக்க முடியாது.

அப்படி எந்த அடையாளமும் இல்லாத வாழ்க்கையை நாம் வாழும்போது நம்மிடம் கனி இல்லை என்று பொருள். எனினும் தந்தை வந்து நம்மிடம் 'ஒரு கனியாவது' கிடைக்காதா எனும் ஏக்கத்தோடு தேடுகிறார். கிடைக்கவில்லை.

இனிமேல் இதை வெட்டி விட வேண்டியது தான் என முடிவெடுக்கிறார் பிதா. தேவனின் வரங்களையும், அவரிடமிருந்து எல்லா நன்மைகளையும் பெற்று நாம் வளர்கிறோம். அத்தி மரம் போல எல்லா உரத்தையும், நீரையும், காற்றையும், ஒளியையும் வீணாக்குகிறோம். இலைகளையும், கிளைகளையும் கவனிக்கும் அவசரத்தில் கனிகளைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்து விடுகிறோம்.

கனி கொடுக்காத வாழ்க்கை என்பது நமக்கு மட்டுமான இழப்பல்ல. சமூக இழப்பு. அத்தி மரம் திராட்சைச் செடிகளுக்கான உரத்தைத் தின்று கொழுக்கிறது. அத்தி மரம் இல்லாமல் இருந்திருந்தால் திராட்சையாவது சில கனிகளை அதிகமாய்க் கொடுத்திருக்கும். இப்போது அதுவும் இல்லை.

அத்தி மரம் வெட்டப்படும் என்பது இந்த உவமை சொல்லும் முத்தாய்ப்புச் செய்தி. வாய்ப்புகள் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டே இருக்காது. வெட்டப்படும் நாள் ஒன்று உண்டு. இப்போது நடப்பவை கூடுதலாய்க் கிடைத்திருக்கும் காலம். கிருபையின் காலம். இந்த கிருபையின் நாட்களிலாவது கனி தராவிடில் மரம் தறிக்கப்படுவது நிச்சயம்.


கனி கொடுத்தால் பரலோக வாழ்வாகிய மீட்பு.

கனி தர மறுத்தால் நெருப்பு நரகத்தில் அழிவு.

நமது வாழ்க்கையை மறு பரிசீலனை செய்வோம். நமது வாழ்க்கை கனிதரும் வாழ்வாய் இருக்கிறதா? நாம் கனிதர தேவகுமாரனின் உதவியை நாடுகிறோமா? நமது வாழ்க்கை தேவனுக்கு ஏற்புடையதா இல்லை ஏமாற்றமுடையதா? பிறரைத் தீர்ப்பிடும் மனநிலையிலிருந்து திருந்தியிருக்கிறோமா? நம்மை நாமே ஆராய்கிறோமா?

# ஓநாய்!

**ஓநாயின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.**



# வேத வசனமும் அதற்கேற்ற பழமொழியும்



- வெளியரங்கமாகாத இரகசியமுமில்லை, அறியப்பட்டு வெளிக்கு வராத மறைபொருளுமில்லை, லூக்கா 8:17
  கத்தரிக்காய் முற்றினால் கடைத்தெருவுக்கு வராமலா போய்விடும்?

- ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? ஏசாயா 49:15
  பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு.

- வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு, நீதிமொழிகள் 11:24
  இட்டாருக்கு இட்ட பலன்.

- வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம், 1 யோவான் 3:18
  சொல்லிலும் செயல் உத்தமம்.

- வானமும் பூமியும் ஒழிந்துபோகும், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை, மத்தேயு 24:35
  காலம் போம் வார்த்தை நிற்கும், கப்பல் போம் துறை நிற்கும்.

- ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே, ஐசுவரியவானை உன் படுக்கையிலும் நிந்தியாதே; ஆகாயத்துப் பறவை அந்தச் சத்தத்தைக் கொண்டுபோகும், செட்டைகளுள்ளது அந்தச் செய்தியை அறிவிக்கும், பிரசங்கி 10:20
  அக்கம் பக்கம் பார்த்துப் பேசு.

- யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள், யாக்கோபு 1:19
  நிறைய கேள், குறைவாகப் பேசு.

- பிரம்பைக் கையாடாதவன் தம் மகனைப் பகைக்கிறான், நீதிமொழிகள் 13:24
  முருங்கையை ஒடிச்சி வளர்க்கணும், பிள்ளையை அடிச்சு வளர்க்கணும்.

- இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும், மத்தேயு 12:34
  அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

# வித்தியாசங்கள்

## இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 5 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.





விடைகள்:
1. ஆடை, 2. முக்காடு, 3. தூண், 4. தடி, 5. மூன்று நபர்கள்

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

# கிறிஸ்துவில் வளர பயன்படுத்திக் கொள்ளுங்கள்



திருப்பத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள

**அன்றன்றுள்ள அப்பம்**

ஜெப மண்டபத்தில் உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்காக சில ஏற்பாடுகளை செய்துள்ளோம்.







நீங்கள் தனி நபராகவோ, குடும்பமாகவோ அல்லது குழுவாகவோ உபவாசமிருந்து ஜெபிக்க தனித்தனி அறைகள் அங்கே உண்டு. தேவ பிரசன்னம் நிறைந்துள்ள இயற்கை எழில் வாய்ந்த சூழல். அமைதியை விரும்புவோர்களுக்கான தனித்துவமான இடம். இந்த ஜெப மண்டபத்தை ஊழியம் / திருச்சபை சார்ந்த முகாம்கள், கருத்தரங்குகள், வாலிபர் கூட்டங்கள், உபவாச முகாம்கள், *Family Meetings* போன்ற கூடுகைகள் நடத்தவும், சபை வேறுபாடின்றி யாவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நீங்கள் கர்த்தருக்குள்ளான உறவிலும் ஆவிக்குரிய ஜீவியத்திலும் வளரவும் பெலனடையவும் விரும்பினால் இந்த வளாகத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

வருடத்தில் 365 நாட்களும் 24X7 நேரமும் உங்களுக்காக இந்த ஜெப மையம் திறந்தே இருக்கும். மனப்பூர்வமான சிறு காணிக்கைக் கொடுத்து இதை பயன்படுத்திக் கொள்ளலாம்.



அன்புடன்

Pastor **OSBORNE JEBADURAI**

முன் அனுமதிக்கு

**+91 9003067777,+91 9884908777,+91 9884916777**
**எண்ணில் தொடர்பு கொள்ளவும்.**

Date of Publication on Last Week of Previous Month
REGISTRAR OF NEWSPAPER FOR INDIA
TNTAM/2006/17835
Posted on 19th & 20th at RMS/1
Patrica Channel, Egmore, Ch - 8.

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்



Join Us For

# வார நாட்களில்
## சபையில் நடைபெறும்
## மாலை நேர கூட்டங்கள்



**அதிகாலையில் ஆராதனை**
தினந்தோறும்
காலை 5.00 மணிமுதல் காலை 6.00 மணிவரை



**குடும்ப ஆசீர்வாத ஜெபம்**
தினந்தோறும்
காலை 10.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை



**மன்றாட்டு ஜெபம்**
திங்கட்கிழமைதோறும்
மாலை 6.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை



**இஸ்ரவேலுக்கான ஜெபம்**
செவ்வாய்க்கிழமைதோறும்
மாலை 6.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை



**வேதாகம வகுப்பு**
புதன்கிழமைதோறும்
மாலை 6.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை



**சுகமளிக்கும் ஆராதனை**
வியாழக்கிழமைதோறும்
மாலை 6.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை



**விடுதலையின் ஆராதனை**
வெள்ளிக்கிழமைதோறும்
மாலை 6.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை



**காத்திருப்பு ஜெபம்**
சனிக்கிழமைதோறும்
மாலை 6.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை–600024
தொடர்புக்கு : 9884908777, 9003067777



If undelivered please return to:

**Elim Glorious Revival Church**
#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com